**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை - 2016**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 9(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

--------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 க்கமைய, நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்படு காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 468.9 மில்லியன் கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகக் தேய்மானத்திற்கு உள்ளாகியிருந்தபோதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, மதிப்பீடு செய்த வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03க்கமைய மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நான்கு செயற்திட்டங்களை அமுலாக்கும் வேலையை ஆரம்பிப்பதற்கு ரூபா 46,257,776 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. இதில், ரூபா 32,859,055 தொகையானது 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்த்து வைக்கப்பட்டிருந்தபோதும், அதனைக் கணக்கிலிடாமையால் முற்பணக் கணக்கும் நடைபெறும் வேலைக் கணக்கும் அத்தொகையால் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டியாக ரூபா 5,718,147 காட்டப்பட்டிருந்தபோதும், வங்கி மீதி உறுதிப்படுத்தலில் அது ரூபா 6,706,120 ஆகியமையால் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 987,973 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் 5 கணக்கீட்டு விடயங்களது மீதியாகக் காட்டப்பட்டிருந்த தொகையை தொடர்புடைய பட்டோலைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 5,941,349 கூட்டுத் தொகை வித்தியாசம் நிலவியது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கீட்டு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இறுதிக் கையிருப்பு | 11,483,637 | நேரடிச் சரி, பிழை பார்த்தல் அறிக்கைகள் |
| (ஆ) விளையாட்டுச் சங்கங்களிலிருந்து பெற வேண்டிய மீதி | 10,172,936 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| (இ) பெற வேண்டிய மீதி | 33,536,437 | |
| | 55,193,010 | |

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெற வேண்டிய மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 43,709,373 ஆகும். அந்நிலுவை மீதிகளுள் ரூபா 28,246,743 பத்து ஆண்டுகளைக் கடந்திருந்தபோதும் அதனை அறவிடுவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(ஆ) மூன்று ஆண்டுகளைக் கடந்த ரூபா 437,878 கூட்டுத் தொகையுடைய 11 மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்கெனக் கொடுப்பனவு செய்ய வேண்டிய பெறுமதி சேர் வரியின் பொருட்டு ரூபா 8,939,262 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவ்வரியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கோ அல்லது கணக்கில் அதனைத் தீர்த்து வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னரே பாதீடு தயாரிக்கப்பட்டு அதனை அதிகாரசபையின் ஆளுநர் சபை அங்கீகரித்திருக்க வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஏதாவதொரு விசேட பணிக்காக நிறைவேற்றுதர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் அதிகளவு ரூபா 100,000 செயல் நிமித்த முற்பணமாக வழங்கப்படலாமெனினும், 7 சந்தர்ப்பங்களில் ரூபா 2,388,905 கூட்டுத் தொகையுடைய முற்பணம் நிதிப் பராமரிப்பு பிரிவினதும் கொள்வனவுப் பிரிவினதும் விடயப் பொறுப்பு எழுதுவினைஞர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதிப் பெறுபேறு ரூபா 117,402,554 பற்றாக்குறை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 246,797,596 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் 52 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 129,395,042 முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அரசாங்க மானியம் 22 சதவீதமாக ரூபா 29,050,000 அதிகரித்தமையே மேற்படி நிதிப் பெறுபேற்றிலான முன்னேற்றத்திற்கான பிரதான காரணியாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2012 முதல் 2016 வரை நிதிப் பெறுபேறு நலிவடைந்திருந்தது. எனினும், 2014 உடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டின் பற்றாக்குறை அதிகரித்திருந்ததுடன் மீண்டும் மீளாய்வாண்டின்போது குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் மற்றும் அரசாங்க வரி என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்கையில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 90,592,946 ஆகவிருந்த அதிகாரசபையின் பங்களிப்பு 2015 ஆம் ஆண்டைத் தவிர தொடர்ந்து முன்னேற்றமடைந்து மீளாய்வாண்டின்போது ரூபா 150,745,273 ஆகியிருந்தது.

**3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது சபையின் நடைமுறை விகிதம் 1.22 முதல் 2.19 வரையாகவும் துரித விகிதம் 1.13 முதல் 2.08 வரையாகவும் முன்னேற்றமடைந்திருந்ததுடன், அதற்கமைய நிறுவனத்தின் குறுகிய காலப் பொறுப்புகளைத் தீர்த்து வைக்கும் ஆற்றல் அதிகரித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

அதிகாரசபை அமைக்கப்பட்ட 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், நிறுவனத்தின் நோக்கம் யாது என்பது நிச்சயமாகக் குறிப்பிடப்படாதபோதும், மைதானங்களிலும் திடல்களிலும் போட்டிகள், நீச்சல் போட்டிகளை நடாத்துதல் மற்றும் பயற்சிச் செயலமர்வுகளை நடாத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், பரீட்சைகள், கருத்தரங்குகள், மாநாடுகள் என்பவற்றை நடாத்துதல் மற்றும் பொதுமக்களின் ரசனைக்காக உள்ளரங்க வசதிகளை வழங்குதல், விளையாட்டாளர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குதல் மற்றும் அவற்றிற்குச் சமூகமளிப்பவர்களுக்கு வாகனத் தரிப்பிட வசதிகளை வழங்குதல் என்பன நிறுவனத்தின் கடமைகளாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விசேட நிதி ஏற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டின்போது 400 மீட்டர் மற்றும் 200 மீட்டர் செயற்கை விளையாட்டு மைதானத்தை மீண்டும் ரூபா 99 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டபோதும் பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவேறாமையால் அச்செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டில் அமுலாகவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின்போது அதிகாரசபை அரச வங்கி ஒன்றில் ரூபா 24,919,800 ஐ 07 நாள் வைப்பிலிட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் முதல் 4 ஆண்டுகள் மற்றும் இறுதி 08 மாதங்கள் என்பவற்றிற்கு முறையே 4.5 சதவீதம், 5.75 சதவீதம் என வட்டியைப் பெற்றிருந்தது. இந்த 07 நாள் வைப்பின் மூலம் 2008 முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 6,706,120 வட்டி கிடைத்திருந்ததுடன், வங்கியால் இந்த வட்டிக்கும் 07 நாள் வைப்பிற்குரிய வட்டி வழங்கப்பட்டிருந்தது. மேற்படி முதலீடானது நெடுங்கால நிலையான வைப்பிலிடப்பட்டிருப்பின் அதிகளவு வட்டியைப் பெற்றிருக்க வாய்ப்பிருந்த போதும், 07 நாள் வைப்பில் முதலீடு செய்தமையால் சாதகமான நிதிசார் நன்மைகளைப் பெற்றிருக்க கூடிய வாய்ப்பை அதிகாரசபை இழந்திருந்தது.

(ஆ) விளையாட்டு போட்டிகளுக்கும் பயிற்சிகளுக்கும் அதிகளவு தூரத்திலிருந்து வரும் விளையாட்டாளர் இருபாலார்க்கும் தங்குமிட வசதியை வழங்கும் நோக்குடன் சுகததாச விளையாட்டுத்துறை ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டிருந்தபோதும், பணம் எதுவும் அறவிடப்படாது வருகை தருவோருக்குத் தங்குமிட வசதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, விளையாட்டுத் துறை ஹோட்டலில் உள்ளே அமைந்துள்ள பாதுகாப்பு கெமரா முறைமை ஓராண்டாகச் செயலிழந்திருந்தது.

(இ) ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ரூபா 2,770,919 நெடுங்கால முதலீட்டிலப்படாது இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 4.3 பொருட் கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான விளையாட்டரங்கின் கூரை மற்றும் பலகை பொருத்தப்பட்ட நிலம் என்பவற்றைப் பழுதுபார்க்கும் ரூபா 135 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியிலான ஒப்பந்தம் 2015 டிசெம்பர் 03 ஆந் திகதியன்று வழங்கப்பட்டிருந்தது. 2016 நவம்பர் 30 ஆந் திகதி அப்பழுதுபார்த்தல் வேலைகள் நிறைவடைவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மதிப்பீட்டில் நிலவிய தவறுகளின் நிமித்தம் 2016 நவம்பர் 30 ஆந் திகதியளவிலும் பலகை பொருத்தப்பட்ட நிலப்பகுதியின் பழுதுபார்த்தல் வேலை முடிவடைந்திருக்கவில்லை.

(ஆ) சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நீர் வழங்கல் நடவடிக்கைகளும் நிலத்தில் செங்கற்களைப் பதிக்கும் வேலைகளுக்குமான ரூபா 29.45 மில்லியனுக்கான ஒப்பந்தம் 2016 பெப்ரவரி 02 ஆந் திகதியன்று வழங்கப்பட்டிருந்தது. 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அவ்வொப்பந்தம் நிறைவேற வேண்டியபோதும், 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அச்செயற்திட்டம் நிறைவேறாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அதிகாரசபை 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதியே சமர்ப்பித்திருந்தது.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நெடுங்காலத் தொலைநோக்குடன் நோக்கத்தை ஈடேற்றுவதற்கான இலக்குடன் அமைந்த செயல் நடவடிக்கைகளை உள்ளடக்கிய செயல் நடவடிக்கைத் திட்டத்தை அதிகாரசபை தயாரித்ததாகக் குறிப்பிடப்பட்டபோதும் அவ்வாறான செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பதின்மூன்று செலவின விடயங்களது மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 28 முதல் 121 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டியது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) சொத்து முகாமைத்துவம் | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) கடன்பட்டோரது அதி கூடிய எல்லைகளும் காலமும் சம்பந்தமாக எல்லைகள் நிர்ணயிக்கப்படாமை |
| | (ii) கடன்பட்டோரின் மீதி உறுதி செய்யப்படாமை. |
| | (iii) பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளைத் தீர்த்து வைக்காமை. |

| | | |
|---|---|---|
| (இ) | கணக்கீடு | (i) கணக்கீட்டுக்குப் பெறப்பட்ட கணனி மென் அணி மூலம் மொத்தக் கணக்கீட்டு முறைமை செயற்படுத்தப்படாமை. |
| | | (ii) பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரது அங்கீகாரத்துடன் நாட் குறிப்பு இடப்படாமை |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டிற்கும் உள்ளவாறான புள்ளி விபரங்களுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியமை. |